Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 16 வெள்ளிக்கிழமை (01-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 238



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


# கப்பலின்றி ஆயிரக்கணக்கானோர் திருமலையில் தொடர்ந்து தரிப்பு!

## சேவை ஆரம்பிப்பது குறித்து முடிவு இல்லை

கொழும்பு, ஓகஸ்ட் 1

காங்கேசனுக்கான கப்பல் சேவையை எதிர்பார்த்து ஆயிரக்கணக்கான வடபகுதிப் பயணிகள் திருமலையில் பெரும் சிரமங்கள் மத்தியில் தொடர்ந்து தங்கி உள்ளனர். எனினும் பயணிகள் கப்பல் சேவை குறித்து நேற்றுவரை முடிவு எதுவும் செய்யப்படவில்லை.

பேசாலைக் கடல் பகுதியில் பயணிகள் கப்பலான மிசென் கப்பல் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதை அடுத்து பயணிகள் கப்பல் சேவை ஸ்தம்பிதம் அடைந்தது தெரிந்ததே.

'குட்வில் கைட்' என்ற கப்பல் வாடகைக்கு அமர்த்தப்


(8 ஆம் பக்கம் பார்க்க)


## முச்சந்தி முரளி



சந்தை விவகாரத்திலேயே இப்படி என்டால் தீர்வுத்திட்டம் என்ன பாடுபடப் போகுது…?

## வன்னியில் படையினர் தொடர்ந்து நிலைகளைப் பலப்படுத்துகின்றனர்

### சிறிது அளவில் மோதல்கள்

கொழும்பு, ஓக 1

வெற்று உரதி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் தமது பாதுகாப்பு வலயத்துக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில் நிலைகளை பலப்படுத்தி வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அடிக்கடி சிறிய ஆயுதங்கள் மூலம் தாக்குதல்களை மேற்கொண்ட போதும் படையினர் அவற்றை முறியடித்ததாகவும் —

இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்றுத் தெரிவித்தது. (இ-4)

## மஹ்ரூப் கொலை தொடர்பாக மற்றும் ஒருவருக்கு வலைவீச்சு

கொழும்பு, ஓக. 1

நாடாளுமன்ற உறுப்பினர் மஹ்ரூப்பின் படுகொலை தொடர்பாக சந்தேகிக்கப்படும் மற்றுமொரு பிரதான நபரைக் கைது செய்வதற்கு இராணுவத்தினரும் பொலீஸாரும் தேடுதல்களை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் படுகொலையுடன் தொடர்பான பிரதான சந்தேக நபர் ஒருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை சாம்பல் தீவில் வசிப்பவரான சசிக்குமார் என்றழைக்கப்படும் இந்த சந்தேக நபர் விடுதலைப் புலிகளின் படைப் பிரிவில் பயிற்சி பெற்றவரென பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

மஹ்ரூப்பின் படுகொலை தொடர்பாக மேலும் 20 நபர்கள் வரை விசாரணைக்காக கைது செய்யப்படவுள்ளனர் என்று திருகோணமலை சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-4)

## திருமலை சந்தைக்கட்டட விவகாரம் இனமோதலாக உருவாகும் அபாயம்

### ஜனாதிபதி செயலகத்தில உயர்மட்ட மாநாடு

திருகோணமலை, ஓக. 1

திருகோணமலையில் 60 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுவரும் புதிய சந்தை தொடர்பாக எழுந்துள்ள இனவாதப் பிரசாரம் குறித்து ஆராய ஜனாதிபதி செயலகத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

திருகோணமலை நகரில் கட்டப்பட்டு வரும் சந்தை தமிழர்களுக்கு வழங்கப்படவிருப்பதாகவும் —

தமிழர்களின் கோட்டையாக அந்தச் சந்தை விளங்கப் போகிறது என்றும்— தற்போது உள்ள சந்தையில் தொழில் செய்யும் சிங்கள வர்த்தகர்கள் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இதனால் அங்கு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் குரோத நிலையை நீக்கும் வகையில் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கருணரத்தின உயர்மட்ட மாநாடு ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூட்டினார்.

இம்மாநாட்டில் மாகாண சபை பிரதம செயலாளர் ஜி. கிருஷ்ணமூர்த்தி, நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி, பாது


(8 ஆம் பக்கம் பார்க்க)


## மட்டக்களப்பு--திருமலை வீதியில் படையினர் கடும் சோதனை

கொழும்பு, ஓக. 1

மட்டக்களப்பு—திருகோணமலை வீதியில் படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஆங்காங்கே வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு கடும் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வாழைச்சேனை தமிழ் சந்தை வீதி, அடுகாடு நோக்கிய வீதி விபுலானந்தர் வீதி ஆகியவற்றில் போக்குவரத்து கடுமையாக கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

திருகோணமலையில் இன்னர் ஹாபர் வீதி, சீ. வி.வீதி, விகாரை வீதி, வெலிங்டன் வீதி, கிறிஸ்தவ கல்லறைத் தோட்ட வீதி ஆகியவை கடும் கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியிருக்கின்றன. (இ-4)

## தகுதியுடைய இலங்கையருக்கு நிரந்தர வதிவிட வீஸா!

### பிரெஞ்சு அரசு நடவடிக்கை

பாரிஸ், ஓக. 1

பலவருடங்களாக பிரான்ஸின் தங்கியுள்ள சட்டபூர்வமான வதிவிட அனுமதிப் பத்திரம் அற்ற இலங்கையர்கள் உட்பட சுமார் 40 ஆயிரம் வெளிநாட்டவர்களுக்கு நிரந்தர தங்குமிட வீஸா வழங்குவது என பிரெஞ்சு அரசு தீர்மானித்துள்ளது;

அதேபோல் சட்டபூர்வமான வதிவிட அனுமதிப் பத்திரத்தைப் பெற்று பிரான்ஸில் வாழும் வெளிநாட்டைச்


(8 ஆம் பக்கம் பார்க்க)


# இலங்கையுடனான ராஜீய உறவை இந்தியா துண்டித்துவிட வேண்டும்

## மத்திய அரசிடம் கோரிக்கை

சென்னை, ஓக. 1

இலங்கையுடனான ராஜீய உறவுகளை இந்தியா துண்டிக்க வேண்டுமென மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை. கோபால்சாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களுடன் பேசிய கோபால்சாமி, கடந்த 15 ஆண்டுகளில் தமிழக மீனவர்கள் மீது ஆயிரத்துக்கும் மேலான தாக்குதல்களை இலங்கைக் கடற்படை நடத்தியிருக்கிறது. நூற்றுக்கும் மேலான தமிழ் மீனவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்றார்.

தமிழ் மீனவர்கள் மீதான மிருகத்தனமான தாக்குதல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இந்தியக் கடற்படையும் கடலோரப் பாதுகாப்புப் படையும் வெறும் பார்வையாளர்களாக இருக்கின்றன. இலங்கை அரசுக்கு இறுதி எச்சரிக்கை விடுக்கவேண்டியது இந்திய அரசின் தார்மீகக் கடமை என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரதமர் குஜ்ராலையும் கோபால்சாமி சந்தித்து மீனவர் பிரச்சினை குறித்து பேசினார்.

இந்தப் பிரச்சினையை உடனடியாகக் கவனிப்பதாகப் பிரதமர் உறுதியளித்ததாக நேற்று சென்னையில் கோபால்சாமியால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4-10)

## மேலும் இருவர் விசாரணையில்

யாழ்ப்பாணம், ஓக. 1

வடமராட்சிப் பகுதியில் மேலும் இருவர் இராணுவத்தினரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியைச் சேர்ந்த இவ்விரு


(8 ஆம் பக்கம் பார்க்க)


## ஆயுதத்துடன் ஒருவர் கைது

திருகோணமலை, ஓக. 1

திருகோணமலை சீனன்குடா திருக்கைக்குடா என்னும் இடத்தில் கிரனேட், ரி 56 ரக ரவைகள் ஆகியவற்றுடன் சிங்களவர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 10 30 மணியளவில் விசேட பாது


(8 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி நகரசபைச் செயலாளர்

## உயர் திரு. சி. நடராசா அவர்கள்

இலங்கை நிர்வாக சேவைக்குத் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதனை மனதார வாழ்த்துகின்றோம்.

ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய பரிபாலன சபை,
ஸ்ரீ பழநி சிக்கன கடனுதவு கூ. சங்கம்.
டச்சு வீதி - சாவகச்சேரி.

(சி/1245)



# புலமைப்பரிசில் '97

எமது நிறுவனத்தில் நடந்த
4 ஆவது மாதிரிப் பரீட்சையில்

1) பிரியங்கரி சத்தியசீலன் — 182 புள்ளி
சென் ஜோண் பொஸ்கோ
2) தர்ஷணா குகதாஸ் — 170 புள்ளி
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
3) கிளினிஸ்ரா தர்மரட்ணம் — 170 புள்ளி
சென் ஜோண் பொஸ்கோ

பெற்றமைக்காகப் பாராட்டுகின்றோம்.

- 03-08-97 ஞாயிறு 5ஆவது மாதிரிப் பரீட்சை
- 06-08-97 புதன் 6 ஆவது மாதிரிப் பரீட்சை

வழமைபோல் 7 பிரிவுகளாக நடைபெறும்.

**BOND INSTITUTES**
யாழ்ப்பாணம்.

(48715)


# மரண அறிவித்தல்கள்

## யோன் பெனடிக்ற் M. PHL, SLES.

(பெனடிக்ற் பாலன்)

முன்னாள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் விரிவுரையாளரும், கொழும்பு தெற்கு பிரதிக் கல்வி பணிப்பாளரும், எழுத்தாளருமான ஜோன் பெனடிக்ற் (பாலன்) கொழும்பில் 30 - 07 - 1997 இல் காலமானார்.

இவர் யாழ். மருதடி வீதி காலஞ்சென்ற ஜோன் அன்னம்மா தம்பதிகளின் புதல்வரும் கிரேசின் அன்புக் கணவரும், அமரன் (லண்டன்), விவேகா (லண்டன்), பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை, மற்றும் திருமதி இராசையா யோகம்மா, திருமதி துரைச்சாமி திரேசம்மா, பிரான்சிஸ், அருளானந்தம் (கோசி), காலஞ்சென்ற யேசேப் மணி ஆகியோரின் அன்புத் தம்பியுமாவார்.

அன்னாரின் அடக்கச் சடங்குகள் சனிக்கிழமை 02 - 08 - 1997 இல் கொழும்பில் நடைபெறும்.

தகவல் :
அருள் திரு. அன்ரன் மத்தாயஸ்
(மைத்துனர்)

134, எலி ஹவுஸ் வீதி,
முகத்துவாரம்,
கொழும்பு —15.

(48711)

## வைத்திலிங்கம் ஜெயராசசுந்தரம்

(ஜெயம் அண்ணை—சுழிபுரம்)

சுழிபுரம், தேவதோட்டம் அமரர்கள் வைத்திலிங்கம் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் புன்னாலைக்கட்டுவன் அமரர் மகாலட்சுமியின் அன்புக்கணவரும் அமரர் அம்பலவாணர் (இளைப்பாறிய தபாலதிபர்) அமரர் டாக்டர் மநு நீதி. கனகசபாபதி (இளைப்பாறிய பொறியியலாளர் -நீர்வழங்குசபை) ஆகியோரின் அன்புச் சகோதரருமான ஜெயராசசுந்தரம் 30-7-97 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31-7-97 வியாழக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் நடைபெற்றன.

வை, கனகசபாபதி

தேவதோட்டம்,
சுழிபுரம் மத்தி.

(48722)

## கணபதிப்பிள்ளை மாசிலாமணி

(ஆசாரி)

மாதகல், அந்தோனியார் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட கணபதிப்பிள்ளை மாசிலாமணி (ஆசாரி) 30-7-97 இல் வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், விஜயலக்ஷ்மி, குகப்பிரகாசம், யோகதாசன், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகதாஸ், சுகுணா, சறோஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், க. கதிரவேலுவின் அன்புச் சகோதரரும், நளாஜினி, மயூரதி, சாருகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
க. கதிரவேலு
(சகோதரன்)

40/1, கலைமகள் வீதி,
அரியாலை.

(48699)

## பாடசாலை விடுமுறை

வலிகாமம் தெற்கு, ஓ.ந.1 அரசாங்க பாடசாலைகள் யாவும் இரண்டாம் தவணை விடுமுறைக்காக இன்று வெள்ளிக்கிழமை மூடப்பட உள்ளன.

மீண்டும் எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை மூன்றாம் தவணைக்காக அவை திறக்கப்படும். (ஐ-152)

## பிரிவுபசாரம்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகவும் உப, அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்ற வ. சர்வேஸ்வர ஐயர் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் வி. சுந்தரமூர்த்தி ஆகியோருக்கும்—

இடம் மாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களான திருமதி நி. நாகேந்திரா, வ. தியாகராசா, வே. சிவானந்தன் ஆகியோருக்கு இன்று பிரிவுபசார வைபவம் நடைபெறவுள்ளது. (ஐ-90)


# ஸ்ரீ செல்வா திரையரங்கு

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
10-30மணி, 2-30மணி

அருண்பாண்டியன், அப்பாஸ்
மணிவண்ணன் நடித்த

**ஆசைத் தம்பி**
(புதிய வெளியீடு)

(48820)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### கல்விபட்டப்பின் டிப்ளோமா (முழுநேரம் / பகுதிநேரம்) 1995

மேற்குறித்த 1995ஆம் ஆண்டு பரீட்சைகளுக்குத் தோற்றத் தகுதியுடைய மாணவர்கள், பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையிலிருந்து உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை பிரதிப் பதிவாளருக்கு 1997-08-31 ஆம் திகதிக்கு முன்னராகக் கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீள் பரீட்சார்த்திகள் ஒரு பாடத்துக்கு ரூபா 50/- வீதம் பல்கலைக் கழகக் காசாளரிடமோ அல்லது நவீன சந்தை, யாழ்ப்பாண மக்கள் வங்கி கிளையிலோ செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்துச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1997-08-31 ஆம் திகதிக்குப் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு:- பரீட்சைகள் **18—10—1997** இல் ஆரம்பமாகவுள்ளன.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997-07-29

(சி/1242)


# CELCE

ஆங்கில வகுப்புக்கள்

1) ஆரம்பம்: 01-08-97 3.30 மணி

ஆசிரியர்கள்
திரு. ரீ. தெய்வதவபாலன்,
திரு.எஸ். பொன்னம்பலம்
Lecturer — Gateway Colombo.

2) TOEFL 18-08-97 இல் ஆரம்பம்

விரைவில் பதிவு செய்க

**Managing Director**
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(48719)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### 1995 ஆம் ஆண்டுக்குரிய கலைப்பீடத் தேர்வுகள்

| | | தொடங்கும் திகதி |
|---|---|---|
| 1. | முதலாம் ஆண்டு கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் | 25-08-1997 |
| 2. | முதலாம் ஆண்டு இராமநாதன் நுண்கலைத் தேர்வுகள். | 03-09-1997 |
| 3. | இரண்டாம் ஆண்டு பொது/சிறப்பு கலை பகுதி- 1 கலை / வர்த்தகம் முகாமைத்துவம்/ இராமநாதன் நுண்கலை/ மெய்யியல் மாணி தகுதிகாண் தேர்வுகள். | 17-09-1997 |
| 4. | மூன்றாம் ஆண்டு பொது/ சிறப்புக் கலை பகுதி- 11 கலை/வர்த்தகம்/ முகாமைத்துவம் / இராமநாதன் நுண்கலைத்/ முதுமெய்யியல் மாணி தகுதிகாண் தேர்வுகள். | 06-10-1997 |
| 5. | கல்வி பட்டப்பின் டிப்ளோமா (முழு நேரம் / பகுதி நேரம்) | 18-10-1997 |
| 6. | நான்காம் ஆண்டு சிறப்புக்கலை பகுதி - 111 கலை / வர்த்தகம் / முகாமைத்துவம் / இராமநாதன் நுண்கலை / முது மெய்யியல் மாணி தகுதிகாண் தேர்வுகள். | 27-10-1997 |

மேற்படி பரீட்சைக்குரிய நேரசூசிகளை பரீட்சைப் பகுதி விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1997-07-29

(சி/1241)

# கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலையின் முன்னைநாள் விரிவுரையாளரும்,
ஹொரணை மாவட்டத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளருமாகிய,

## திரு. A. J. பெனடிக்ற் பாலன் அவர்கள்

கொழும்பில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தாருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள், ஊழியர்கள்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
கோப்பாய்.
1997 - 08 - 01

(48710)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் வை. ஜெயராசசுந்தரம்

(ஜெயம் அண்ணை சுழிபுரம்)

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி ஆலய சங்காபிஷேகச் சபைத் தலைவரும், புன்னாலைக் கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினருமாகிய சுழிபுரம், தேவதோட்டம் வைத்திலிங்கம் ஜெயராசசுந்தரம் அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கணபதிப்பிள்ளை இந்திரராசா,
நண்பர்கள் சார்பாக.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(48721)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெருஸலேமில் குண்டுத் தாக்கு!

## அமைதி பேச்சு நிறுத்தம்

ஜெருஸலேம், ஓக.1

ஜெருஸலேம் நகரில் பொது மக்கள் கூடியிருந்த சந்தைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களினால் 17 பேர் கொல்லப்பட்டனர். சுமார் 200 பேர் வரை காயமடைந்தனர்.

இத்தாக்குதலை அடுத்து பாலஸ்தீனர்களுடனான அமைதிப் பேச்சை இஸ்ரேல் நிறுத்தி வைத்துள்ளது.

பயங்கரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியை பாலஸ்தீன தன்னாட்சி நிர்வாகம் செயற்படுத்தாத வரை அமைதிப்பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியாது என்று இஸ்ரேலியப் பிரதமரின் பேச்சாளர் தெரிவித்தார்.

மார்ச் மாதத்தில் தடைப்பட்டிருந்த அமைதிப்பேச்சு வார்த்தையை மீண்டும் தொடங்க இரு தரப்பும் கடந்த 4 நாள்களுக்கு முன்னர்தான் ஒப்புக்கொண்டன.

இப் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளவிருந்த அமெரிக்கப் பிரதிநிதியின் விஜயமும் இதனால் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

இக் குண்டுத் தாக்குதல் குறித்து அதிபர் யஸீர் அரபாத் கண்டனம் தெரிவித்துள்ளார். உடனடியாகவே இஸ்ரேல் பிரதமருடன் தொடர்பு கொண்ட அரபாத் தமது அனுதாபத்தைத் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் உட்படப் பல தலைவர்களும் இத் தாக்குதலைக் கண்டித்துள்ளனர்.

(ஐ-5)

### தற்கொலைத் தாக்குதல்களுக்கு

## ஹமாஸ் இயக்கம் உரிமை கோரியது!

ஜெருஸசேலம், ஓக. 1

கிழக்கு ஜெருஸசேலமில் நடத்தப்பட்ட இரண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களுக்கும் பலஸ்தீன தீவிரவாத இயக்கமான 'ஹமாஸ்' உரிமை கோரியுள்ளது.

நபிகள் நாயகத்தைப் பன்றியாக வர்ணித்து யூதர்கள் ஒட்டிய சுவரொட்டிகளுக்கு பழிவாங்கல் நடவடிக்கை இது என்று ''ஹமாஸ்'' இயக்கம் தெரிவித்துள்ளது.

குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து மேற்குக்கரை மற்றும் காஸா பகுதிகளுக்கு நுழையும் பாதைகளை இஸ்ரேல் மூடிவிட்டது. இதனால் 65 ஆயிரம் பலஸ்தீனியர்கள் தங்கள் வேலைத் தலங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-5)

### தீவிரவாதிகளை ஒடுக்க

## பலஸ்தீன எல்லைக்குள் எமது படை நுழையும்!

### இஸ்ரேலிய அதிகாரி எச்சரிக்கை

ரெல் அவிவ், ஓக. 1

பலஸ்தீன தீவிரவாதிகளைத் தேடிப் பிடிக்க வேண்டிய தேவை ஏற்படின்பலஸ்தீன பிரதேசத்துக்குள் இஸ்ரேலிய துருப்புக்கள் மீண்டும் பிரவேசிக்கும்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நத்தனியாகுவின் ஆலோசகர் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

தீவிரவாதிகளுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை பலஸ்தீன நிர்வாகம் செய்யத் தவறினால் இஸ்ரேலியப் படையினர் அதனைச் செய்வர் என்று அவர் தெரிவித்தார்.

ஜெருஸலேம் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை அடுத்து இஸ்ரேலிடம் இருந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை—

பலஸ்தீன தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் உறுதியளித்துள்ளார்.

(ஐ)

## ஹிட்லரின் மண்டை ஓடு ரஷ்யாவில் உள்ளது?

மொஸ்கோ, ஓக. 1

ஜேர்மனியின் நாஸிப் படுகொலைகளுக்குத் தலைமை ஏற்றிருந்த சர்வாதிகாரி ஹிட்லரின் மண்டை ஓடும், அவர் தற்கொலை செய்து கொண்டபோது படுத்திருந்த படுக்கையும் ரஷ்யாவின் தேசிய அரும்பொருள் காட்சியகத்தில் பேணப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவற்றை பொதுமக்கள் பார்வைக்கு வைக்க ரஷ்யா அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது. நவீன நாஸிஸ ஆதரவாளர்கள் அவற்றை வணக்கப்பொருளாக மாற்றிவிடுவர் எனக்கருதியே ரஷ்யா இவ்வாறு முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டன் நாட்டு அதிகாரி ஒருவர் அண்மையில் அவற்றைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டிருந்தார். ஹிட்லர் தன்னையே சுட்டுக்கொண்ட துப்பாக்கிக் குண்டின் துளை அந்த மண்டை ஓட்டில் அப்படியே இருப்பதாகவும் அதனால் வெளியேறிய இரத்தவெள்ளம் படுக்கையில் அப்படியே உறைந்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

(ஐ-5)

# சர்வதேச இளைஞர் மாணவர் விழா

# கியூபாவில் கோலாகல ஆரம்பம்!

### ஹவானாவில் சே குவராவின் சுவரொட்டிகள்

ஹவானா, ஓகஸ்ட் 1

சர்வதேச இளைஞர், மாணவர் மாநாடு கியூபாவின் தலைநகர் ஹவானாவில் கடந்த 28 ஆம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளது.

இந்த ஒன்பது நாள் சர்வதேச மாநாட்டை கியூப அதிபர் பிடல் கஸ்ட்ரோ ஹவானா பல்கலைக் கழகத்தில் ஆரம்பித்து வைத்தார்.

உலகின் பல நாடுகளில் இருந்தும் சுமார் 10 ஆயிரம் இளைஞர் யுவதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர், அமெரிக்காவில் இருந்தும் சுமார் 700 பேர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்க அரசு விதித்த தடையை மீறி இவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

கெரில்லா யுத்தத்தில் பிடல் கஸ்ட்ரோவுக்கு வலது கரமாகத் திகழ்ந்து கியூபாப் புரட்சியை வழிநடத்திய எர்னெஸ்ரே சே குவராவுக்கு இந்த சர்வதேச மாநாடு அர்ப்பணிக்கப் பட்டிருக்கிறது.

உலகெங்கும் இடது சாரிகளுக்கு உந்து சக்தியாக விளங்கிய எர்னெஸ்ரோ சே. குவராவின் எலும்புக்கூடுகள் பொலிவியாவில் கண்டெடுக்கப்பட்டு அண்மையில் கியூபாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன.

மாநாடு நடைபெறும் ஹவானா பல்கலைக்கழக வளாகத்தில் சே. குவராவின் உருவப் படங்கள், சுவரொட்டிகள் காணப்படுகின்றன.

குவராவின் புரட்சிகர இலட்சியங்கள் இன்னமும் கூட பெறுமதி மிக்கவையே எனக் காட்டுவதில் கியூபா முன்நிற்கிறது என்பதையே இவை காட்டுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## அல்ஜீரியாவில் கார்க் குண்டு வெடிப்பு

அல்ஜியர்ஸ், ஓகஸ்ட் 1

அல்ஜீரியத் தலைநகர் அல்ஜியர்ஸில் கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் மூவர் பலியாகினர்; 25 பேர் காயமடைந்தனர்.

அல்ஜீரியாவில் கடந்த ஒரு மாத காலத்தில் இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்திய பல தாக்குதல்களில் 500 — க்கு அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

(ஐ)

## சீனாவில் அனல் வீச்சுக்கு 200 பேர் பலி

ஹொங்கொங், ஓகஸ்ட் 1

சீனாவின் வடபகுதியில் உள்ள ''ஸி அன்'' என்ற புராதன நகரப் பகுதியில் கடும் அனல்க்காற்றுக் காரணமாக சுமார் 200 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வயோதிபர்கள் உட்பட 70பேர் ஒரேநாளில் மரணமானதாக 'ரின்—ரின்' என்ற சீன நாளேடு தெரிவித்துள்ளது. கடந்த 50 ஆண்டுகளாக மிக மோசமான அனல் காற்றினால் இப் பிரதேசம் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நூறு விமானங்கள் இழப்பு

புதுடில்லி, ஓகஸ்ட் 1

1993 ஆம் ஆண்டு முதல் இந்திய விமானப்படையின் 100 விமானங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன. அவற்றின் பெறுமதி 800 கோடி ரூபா ஆகும்.

பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் நேற்று முன்தினம் தலைமையகத்தில் இதனைத் தெரிவித்தார். (ஐ-5)

## காபூல் மீது இறுதி தாக்குதல் ஆயத்தம்

காபூல், ஓகஸ்ட் 1

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மீது இறுதித் தாக்குதல் நடத்த தலிபான் எதிர்ப்புப் படையினர் முழு ஆயத்த நிலையில் உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ள காபூல் நகரில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்திலேயே எதிரணிப்படைகள் நிலைகொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இறுதித்தாக்குதல் எந்நேரமும் ஆரம்பமாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ)

## பனிச் சரிவில் 20 பேர் சிக்கினர்!

சிட்னி, ஓக. 1

ஆஸ்திரேலியாவின் பிரபல பனிச்சறுக்கு விளையாட்டுத் தலம் ஒன்றில் ஏற்பட்ட பனிச்சரிவைத் தொடர்ந்து 20 பேர்வரை காணாமற் போயுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பனியால் மூடப்பட்ட இரண்டு தங்கும் விடுதிகளில் இவர்கள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. அப்பகுதியில் மேலும் பனிச்சரிவுகள் ஏற்படலாம் என்று அஞ்சப்படுவதால் மீட்புப்பணிகள் தடைப்பட்டுள்ளன.

தலைநகர் கன்பராவுக்கு 150 கிலோமீற்றர் தென்மேற்கேயுள்ள ஸ்னோவி மலைப்பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தப் பனிச்சரிவில் சிக்கிப் பலர் காயமடைந்துள்ளனர். உயிரிழப்பு ஏற்படுவது நிச்சயம் என்று தோன்றுவதாக பொலீஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-5)

## தீ விபத்தில் 22 பேர் பலி!

டாக்கா, ஓகஸ்ட் 1

பங்களாதேஷில் ஏழு மாடிக் கட்டடம் ஒன்றில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது. அதனையடுத்து ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 22 பேர் பலியாகினர். நூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர்.

(ஐ-5)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 22 — 11 — 1952



மறைவு: 03 — 07 — 1997

அமரர்

வேலாயுதம் அருந்தவநாதன்

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய்
அன்பு நெறி காட்டி எம்மை
அரவணைத்த அப்பாவே!
பாதி வழியில் எம்மைப் பரிதவிக்கவிட்டு
விண்ணுலகம் சென்றனையோ?
வற்றாத கண்ணீருடன்
நாம் இங்கு வாடுகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் பங்கு பற்றி எமக்கு உதவிய, ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் 02. 08. 97 (நாளை) சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, பிள்ளைகள்.

பயித்தோலை, அச்சுவேலி.

(48704)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வல்லுறவு மற்றும் சங்கிலி அறுப்பு;
# ராணுவ கோப்ரல் அடையாளம் காட்டப்பட்டார்
## ஏனைய இருவர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 1

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த மே மாதம் ஒரு நாள் முன்னிரவின் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய செயலிலும், மற்றொருநாள் சங்கிலி அறுப்பு நடவடிக்கையிலும் ஈடுபட்டதாகக் கூறப்படும் இராணுவத்தின் லாண்ட்ஸ் கோபரல் ஒருவர் கடந்த செவ்வாயும், புதனும் இடம்பெற்ற அடையாள அணிவகுப்புகளின் போது நான்கு சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்டார்.

16 வயது மகளின் சங்கிலியை அறுத்த இந்தச் சிப்பாயை அப்பெண்ணின் தாயார் அடையாளம் காட்டினார்.

மற்றொரு வழக்கில்— 29 - 05 - 1997 அன்று இரண்டு பிள்ளைகளின் தாயாரான இளம் பெண்ணை மேற்படி லாண்ட்ஸ் கோப்ரலும் மற்றொரு சிப்பாயும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகக் கூறப்படுகின்றது.

மேற்படி இளம்பெண்ணும், அவரின் மாமனாரும், பெண்ணின் மகனும் அடையாள அணிவகுப்பில் லாண்ட்ஸ் கோப்ரலை அடையாளம் காட்டினர்.

இந்த லாண்ட்ஸ் கோப்ரலுடன் சேர்ந்து மேற்படி ஈனச் செயலில் ஈடுபட்ட பின்னர் வீதிவழியே ஓடி வந்ததாகக் கூறப்படும் மற்றும் இரண்டு சிப்பாய்கள், வழியில் காவலில் இருந்த மற்றைய படையினரால் சுடப்பட்டு கடுங்காயங்களுடன் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனால்

எம் பி. மகிந்த பிரிய, கே. ரி. வை. ஆர். நிஸாந்த ஆகிய மேற்படி இரு சிப்பாய்களும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவில்லை.

ஏனைய எட்டு படையினருடன் சேர்ந்து ஆஜர் செய்யப்பட்ட சந்தேக நபரான சம்பந் சமிந்த றம்புக்பொத்த என்ற லாண்ட்ஸ் கோப்ரலே அடையாளம் காணப்பட்டார்.

சாவகச்சேரி பொலீஸார் சந்தேக நபரை யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்தனர். பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது.

பாதிக்கப்பட்ட இரு பிள்ளைகளின் தாய் அடையாள அணிவகுப்பின் போது சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

'எனது பிள்ளைகள் இருவரையும் அறைக்குள் பூட்டினார்கள். சத்தம்போட்டால் சுட்டுவிடுவேன் என்று அவர்களை அச்சுறுத்தினார்கள். உயரமான அந்த சுவருக்கு அடுத்த புறத்துக்கு என்னை ஓர் இராணுவச் சிப்பாய் அழைத்துச் சென்று கற்பழித்தான். சத்தம் போட்டால் கொன்றுவிடுவேன் என எச்சரித்துவிட்டு எனது உடலிலிருந்த மண்ணை தட்டிவிட்டு வெளியே நின்ற மற்ற இராணுவச் சிப்பாயை வருமாறு சைகை காட்டினான். பிறகு அவனும் என்னைக் கற்பழித்தான்'' — என்றார்.

பாதிக்கப்பட்ட பெண்ணின் மாமனார் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

29-05-97 இரவு சீருடையில் வந்த ஒருவர் வீட்டிற்கு வெளியில் படுத்திருந்த என்னைத் தட்டி எழுப்பி 'ரோச்' அடித்தார். நான் அவரை 'யார்' என்று கேட்க சத்தம் போடக்கூடாது என அச்சுறுத்தினார். பின்னர் எனது மருமகள் படுத்திருந்த அறையைக் காலால் உதைத்தார். விளக்குடன் வெளியே வந்த மருமகளை விளக்கை உள்ளே கொண்டு போகுமாறு பணித்துவிட்டு, மருகளின் பிள்ளைகளை அறைக்குள் விட்டு பூட்டினார்.

''நீங்கள் எல்.ரி.ரி.ஈ-க்கு உணவு கொடுப்பவர்கள்'' என்று கூறி என்னை அச்சுறுத்தினார். பின்னர் எனது மருமகளை வெளியே இழுத்துக் கொண்டுபோய் விட்டுவிட்டு மீண்டும் என் பக்கத்தில் நின்றார். அப்போது இந்த சந்தேகநபர் வெளியில் நின்றார் — என்றார்.

அடையாள அணிவகுப்பு இடம்பெற்றதும் வழக்கை எடுத்த சாவகச்சேரி நீதிபதி எஸ் ஏ.ஈ ஏகநாதன் சந்தேக நபரை 10 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் 25 ஆயிரம் ரூபா சொந்தப்பிணையிலும் விடுவித்ததுடன் மீண்டும் இந்த வழக்கு அடுத்த மாதம் 27 ஆம் திகதி எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

தங்கச்சங்கிலி அறுப்பு வழக்கு யாழ் நீதிமன்றத்தில் வைத்து சாவகச்சேரி பதில் நீதிபதி எஸ். கந்தசுவாமி முன்னிலையில் எடுக்கப்பட்டபோது சந்தேகநபரை 5 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 10 ஆயிரம் ரூபா சொந்தப் பிணையிலும் விடுவித்தார்.

(உ-5-15)

## விவசாய ஆலோசனைக் கூட்டம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவு விவசாய ஆலோசனைப் பிரதிநிதிகளுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் ந. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ஐ-90)

## தாய்ப்பால் ஊட்டும் வாரம் இன்று முதல் அனுஷ்டிப்பு!

திருநெல்வேலி, ஓஸ்ட்1

'உலக தாய்ப்பால் ஊட்டும் வாரம்'' யாழ். சுகாதாரப் பிராந்தியத்தில் இன்று முதலாம் திகதி தொடக்கம் 7 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ். பிராந்திய சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையில் னால் இது பற்றிய சுற்றறிக்கை சகல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தாய்ப்பால் ஊட்டுவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், இதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி தாய் — சேய் சிகிச்சை நிலையங்களில் கருத்தரங்குகள் நடத்துதல் ஆகிய பல செயற்பாடுகள் இவ் வாரத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ஐ-135)

## கல்விக் கல்லூரி அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரம்
### யாழ். கல்வித் திணைக்களத்தில்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 1

வவுனியா, மட்டக்களப்பு கல்விக் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த நேர்முகப் பரீட்சைகளை நடத்த வவுனியா கல்விக் கல்லூரி முதல்வர் செ. அழகரத்தினம் தலைமையிலான குழு ஒன்று யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு 10 ஆம் திகதியும்—

ஆரம்பக்கல்வி பாடநெறிக்கு 11 ஆம் திகதியும்—

உடற்கல்வி பாடநெறிக்கு 12 ஆம் திகதியும்—நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவிருக்கின்றன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு கடிதங்கள் நேரடியாக அனுப்பப்பட்டுள்ளன.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்களை 361, கஸ்தூரியார் வீதியில் உள்ள ''உதயன்'' அலுவலகத்தில் பார்வையிடலாம்.

(ஐ-3)

# பிதிர்களுக்குச் செய்யும் தர்ப்பணம் குலம் தழைத்தோங்க வழி செய்யும்

நாளை மறுதினம் ஆடி அமாவாசை தினமாகும். பிதிர்க்கடன் செய்யும் முக்கிய நாள்களில் அதுவும் ஒன்று. பிதிர்க் கடன் செய்வதால் ஏற்படக் கூடிய பயன்களையும், அதன் அவசியத்தையும் விளக்குகின்றது இக்கட்டுரை

மண்ணில் நல்ல வண்ணம் வாழவேண்டுமெனில் தேவர்களை ஆராதிக்க வேண்டும். அத்தோடு பிதிருக்களைத் திருப்தி செய்ய வேண்டும். மனிதன் பெற்றுள்ள இவ்வுடல், வாழ்க்கையில் முன்னோர்களுக்குக் கடனும், கடமையும் பட்டவன் ஆகிறான். அவர்கள் எவ்வுலகில் எந்நிலையில் இருப்பினும் இன்புற்றிருப்பார்கள் எல்றே அவர்களைக் குறித்து நாம் நிதமும் எண்ணுதல் வேண்டும்.

மூதாதையர்களுக்கெனச் செய்யவேண்டிய சிரார்த்தங்கள் ஒரு வருடத்தில் 96 ஆகும். இதை 'ஷண்ணவதி சிரார்த்தங்கள்'' எனச்சொல்வர். யுகங்கள் நான்கு (04), அமாவாசைகள் பன்னிரண்டு (12), மாதப்பிறப்புகள் பன்னிரண்டு (12), மனுக்களின் தினங்கள் பதினான்கு (14), வைகிருதி வியதீபாதம் இருபத்தாறு (26), மாளய பஷ்தினம் பதினாறு (16), அஷ்டகை, அன்வஷ்டகை, பூர்வேத்தியுருக்கு பன்னிரண்டு (12), ஆக தொண்ணூற்றாறு என 'காளாம்ருதம்', என்ற ஜோதிடக் கிரந்தம் கூறுகின்றது.

மானுடனின் ஒரு வருடம் பிதிர்களுக்கும் ஒரு நாளாகும். ஆதலால் நாம் அவர்களுக்குச் செய்யும் சிரார்த்தம் அவர்களுக்குத் தினம் உணவு கொடுப்பது போல் ஆகின்றது. அமாவாசையில் இறைக்கும் எள்ளும் தண்ணீரும் உடனான தர்ப்பணம் அவர்கள் தாகத்திற்குத் தண்ணீர் கொடுப்பதுபோலாகும். சூரியன் சிம்ம, கன்னி இராசிகளில் பிரவேசித்தவுடன் பிதிருதேவதைகள் யமதர்மனிடம் விடைபெற்றுக் கொண்டு தத்தம் குடும்பத்தினருடன் தங்குவதற்காக வந்துவிடுவார்கள். இதனாலேயே எல்லாப் பிதிருக்களையும் திருப்தி செய்வதற்காகச் செய்யப்படும் மாளய சிரார்த்தம் சிரேஷ்டமானது எனப்படுகின்றது. (மஹா-லயம்: எல்லாப்பிதிருக்களும் ஒன்று கூடுவது).

மேலும் தமிழ் மாதப் பிறப்பு, உத்தராயண, தக்ஷிணாயன புண்ய கால காலங்கள், உஷ புண்ய காலங்கள், ஷடசீதி புண்ய காலங்கள்,

—''நியந்திரீ''

(சிவன்கோயில் நல்லூர்)

விஷ்ணுபதி புண்ய காலங்கள், 'ஆகாமாவை' எனும் புண்ய காலங்களிலும் எவ்விதம் அமாவாசையன்று தர்ப்பணம் செய்யப்படுகிறதோ அதே போன்று தர்ப்பணம் செய்யப்படுதல் வேண்டும்.

தெய்வ காரியங்களுக்குப் பக்தி அவசியமானது போன்று பிதிரு காரியங்களுக்கு 'சிரத்தை' அவசியமாகும். சிரத்தையாகச் செய்யப்படுவதனால் தான் 'சிரார்த்தம்' எனப் பெயர் ஏற்பட்டது. 'திருப்' எனும் வடமொழி வினையடியில் இருந்து உண்டான 'தர்ப்பணம்' எனும் சொல் திருப்திப்படுத்துதல் எனப்பொருள்படும். பித்ரு தர்ப்பணம் எனில் பித்திருக்களைத் திருப்திப்படுத்துவதற்காகச் செய்யப்படும் கிரியையாகும்.

தாய், தந்தையரை இழந்த ஒருவரே பிதிரு தர்ப்பணம் செய்யக் கடமைப் பட்டவராகிறார். குடும்பத்தில் புத்திரன் பிறந்தவுடன் அவனுடைய முகத்தைப் பார்த்த உடனேயே அவனது தந்தை பித்ரு ருணத்திலிருந்து விடுபடுவதாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. புத்ரன் - புத் எனும் நரகத்தைத் தாண்டிச் செல்ல உதவுபவன் சந்ததியினருக்கு தீக்கடன், நீர்க்கடன் என்பன செய்வதற்கு புத்திரனே உதவுபவனும், தகுதி உள்ளவனுமாகிறான். தந்தை இறந்த ஒரு வருடத்தின் பின்னர் ஆண்டுத் திவசம் முடிந்த அடுத்த அமாவாசையிலிருந்து தர்ப்பணம் செய்ய ஆரம்பிக்க வேண்டும். ஆண்டுத் திவசம் முடிவடைவதற்குள் கிரகணம் ஏற்பட்டால் அந்தக் கிரகண காலத்தில் தர்ப்பணம் செய்து பின்பு தொடர்ந்து தர்ப்பணத்தைச் செய்து வர வேண்டும். நீர்க்கடனைத் தீர்ப்பதே தர்ப்பணமாகும். பொதுவாக ''குதப'' காலம் எனப்படும்சூரிய உதயத்திலிருந்து பதினைந்து நாழிகையின் பின்மதியான காலமாக நேரமே தர்ப்பணங்கள் முதலியபிதிர் காரியங்கள்செய்வதற்கான உகந்தகாலமாகும்.

தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என் [illegible] திருவள்ளுவரும் தென்புலத்தாராகிய பிதிர்களின் வழிபாட்டினை எடுத்துக் கூறியுள்ளார். எமது சமயத்தின் தொன்மைத் திருநூல்களாகிய 'யஜுர் வேதத்திலும்' பிதிர்களது யக்ஞம் பற்றியும், பிதிர்களைப் பற்றியும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

''அக்கினியே சுவதா அமைப்பில் புசிக்கும் பிதிர்களுக்கு நீ அவற்றை அளிக்கிறாய். விஷ்ணுபாதம் பிரிவுமான பிரிய பிதிர்களை நான் கண்டுள்ளேன். யக்ஞ தர்ப்பைகளில் அமரும் பிதிர்கள் சுவதா அமைப்பால் பொழியப்படும் பானத்தை அனுபவித்து இங்கு வர மிக

**ஞானக்கதிர்**

ஆவலாயுள்ளார்கள்.

வீட்டு அக்னி, தாய் தந்தையருக்கு எக்குற்றம் செய்திருந்த போதிலும் அக்குற்றங்களிலிருந்து என்னை விடுதலையாக்கட்டும். நாங்கள் செய்துள்ள எல்லாப் புன்மையினின்றும் எம்மைப் புனிதமாக்கட்டும். என அக்கினி வழிபாட்டுடன் தொடர்புபடுத்தி கூறியிருப்பதனைக் காணமுடிகின்றது. மேலும் பிதிர்களிடமிருந்து சுகம், செல்வம், பாதுகாப்பு என்பவற்றை வேண்டி பிதிர்வழிபாடு இயற்றப்பட்டதாகவும் கூறுகின்றது.

தைத்ரீய உபநிஷதமும் பிதிர் காரியங்களினின்று மறந்தும் நழுவுதல் கூடாது எனக் கூறுகின்றது. (தேவ பிதிரு காரியாப்யாந் நப்ரமதிதவ்யம்)

தர்ப்பணத்தின் போது தந்தை வழிப்பிதிர்களுக்கும், தாய்வழிப் பிதிர்களுக்குமாகவே தர்ப்பணம் செய்யப்படுகிறது. இந்த பித்ரு யக்ஞம் என்பதன் பாற்படும் சிரார்த்தம் தர்ப்பணம் முதலிய சகல பிதிர்க்காரியங்களிலும் பிதிர்க்கடன் செய்யும் போது நாமறிந்த தந்தை தாய் வழிப்பிதிரர்கள் தவிர சுற்றத்தவர், ஞாதிகள் வழியில் பிதிர் காரியங்களைச் செய்ய யாருமில்லாத ஏனைய இறந்த சுற்றத்தவர்களுக்கும் தர்ப்பணங்கள் கூறப்பட்டுள்ளன. அத்தோடு மட்டுமன்றி இறுதியில் யாருமற்ற பிதிர்களுக்கும் மந்திர பூர்வமாக தர்ப்பணம் கூறப்பட்டுள்ளது.

இது சாஸ்திரங்களை வகுத்த மகான்களின் பரந்த நோக்கத்தையும் கருணையையும் எடுத்துக்காட்டுகிறது.

பிதிர்களை 'உத்தேசித்துச் செய்யப்படும் தர்ப்பணமானது தனம், கீர்த்தி, ஆயுள், சுவர்க்கம் ஆகிய நன்மைகளை வழங்கும். சத்ருக்களை நீக்கும் தன்குலம் தழைத்தோங்கச் செய்யும் எனக் கூறப்படுகின்றது.

பிதிர்களின் வழிபாட்டின் மூலம் பிதிர்களின் மீது தமக்குள்ள நன்றி மனோபாவமும், சாஸ்திரத்தில் நமக்குள்ள நம்பிக்கையும் வெளிப்படுகின்றது. கடப்பதற்குக் கஷ்டமான இந்த சம்சாரக் கடலை சாஸ்திரங்கள் கூறியபடி இயன்றவரை குறிப்பிடப்பட்ட காலங்களில் தர்ப்பணம் முதலிய தர்மாக்களைச் செய்து பிதிர்களின் ஆசியைப் பெற்று தெய்வ வழிபாடுகள் மூலம் இறைவனின் அருளையும் பெற்று இகபர சௌபாக்கியங்களைப் பெற்று உய்வோமாக.

'சர்வே ஜனாஹா சுகிநோ பவந்து'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ். மத்திய கல்லூரியின்

## முத்திரை, முதல்நாள் உறை, மலர் வெளியீடு நிகழ்வுகள் உள்ளடங்கிய

# 181 ஆவது ஆண்டு நிறைவு விழா

(01-08-1816 – 01 08-1997)

## நல்லை ஆதீன முதல்வர் ஆசி

யாழ்ப்பாணத்தினுடைய கல்விப் பாரம்பரியத்தின் தனியான ஓர் இடத்தினை யாழ். மத்திய கல்லூரி அமைத்துக்கொண்டது. அதுபோல இன்றும் என்றும் கல்வியில் தனியான இடத்தை வகித்துக்கொள்ள இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்களைப் போல இன்றைய மைந்தர்களும் மத்தியின் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்துக்கும் தொண்டாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க பழைய மாணவர் சங்கம்!
வளர்க யாழ். மத்திய கல்லூரி!
என்றும் வேண்டும் இன்ப அன்பு!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்
ஆதீன முதல்வர்
திருஞான சம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

## துணைவேந்தர் பாராட்டு

யாழ்ப்பாண மத்திய கல்லூரி 01. 08. 1997 இல் 181 ஆவது நிறுவுநர் தினத்தைக் கொண்டாடுவதையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இலங்கையின் மிகப் பெரும் பழைமையும், புகழும் வாய்ந்த கல்லூரிகளுள் ஒன்றாகிய இக்கல்லூரி, இந்நாட்டினதும், எமது பிரதேசத்தினதும் கல்வி, சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு அளப்பரியது.

சைவ - தமிழ்ப்பணி புரிந்த நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கற்ற, கற்பித்த, கல்விப் பணி புரிந்த இக்கல்லூரி யாழ்ப்பாணத்திற்குப் பல அறிஞர்களையும், கல்விமான்களையும், விளையாட்டு வீரர்களையும், பெரியோர்களையும் தந்துள்ளது. கிரிக்கெட் தொடக்கம் மேற்குலக விளையாட்டுடன் பலவும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வழியாகவே யாழ்ப்பாண மக்களுக்கு அறிமுகமானது.

தற்போது தேசியப் பாடசாலையாக உயர்ந்திருக்கும் இக்கல்வி நிறுவனம் இனிவருங்காலங்களிலும் எமது பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கும், மனிதவள மேம்பாட்டிற்கும் பெரும்பணியாற்ற வேண்டும்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்.

## மேன்மேலும் வளர்க!

இரண்டு நூற்றாண்டுகளை எட்டி வளர்ந்து கொண்டிருக்கும் எமது சகோதரப் பாடசாலை தபால்தலையும், முதல்நாள் உறையும், மலரும் வெளியிடுவதையிட்டு நாமும் பெருமை கொள்கிறோம்; உரிமையுடன் பங்கு கொள்கிறோம்.

மத்தியகல்லூரி என்ற விருட்சத்தின் விழுதுகள் சிறந்தும், பரந்தும் கல்லூரியின் விழுமியங்களைப் பறைசாற்றி நிற்கின்றன என்பது கண்கூடு.

இக்கல்லூரி மேன் மேலும் வளர்ந்து, சிறந்து, நிறைந்து பல நூற்றாண்டுகள் வாழவேண்டுமென மனப்பூர்வமாக வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
வேம்படி மகளிர் கல்லூரி.

## என்றும் இன்புறுக!

ஒரு கல்லூரியை வளமுடையதாக ஆக்க வேண்டுமேயானால் அக்கல்லூரியின் சொல்லேர் உழவர்களாக உள்ள ஆசான்களும், அதன் வளர்ச்சியில் நாட்டங் கொண்ட பழைய மாணவர்களும் நலமுடன் திகழச் செய்ய விரும்பும் நலன் விரும்பிகளும் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அவ்வழியில் இன்று யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் தம் கல்லூரித்தாயின் நூற்றெண்பத்தோராவது ஆண்டு நிறைவு தினத்தில் அத் தாயானவளை உள்ளம் விரும்பி உவகை கொண்டு வாழ்த்தி வணங்கிப் போற்றி நிற்பது கண்டு, எம் மனம் மகிழ்வதுடன், அவர்களது பணியையும் பாராட்டி, கல்லூரி இன்று போல் என்றும் இன்புற எம் உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களைக் கூறி மகிழ்வுறுகின்றோம்.

அதிபர் சி. தனபாலன்
சென். ஜோன்ஸ் கல்லூரி யாழ்ப்பாணம்,

## மெதடிஸ்த அக்கிராசனர் வாழ்த்துகின்றார்

யாழ். மத்திய கல்லூரி 181 ஆவது நிறைவை இன்று நினைவு கூருகின்றான். நன்றி நிறைந்த நெஞ்சங்களோடு நினைவு கூறுகின்றோம். இந்த வேளையில் 181 வருடங்களைத் திரும்பிப் பார்க்கின்றோம். நாம் கடந்து வந்த பாதையைப் பார்க்கின்றோம்.

பாதையில் கல்லுகள், முள்ளுகள், கடஷ்ங்கள் தோன்றியிருக்கலாம், அழிவுகளும், சிதைவுகளும் ஏற்பட்டிருக்கலாம். ஆனாலும் இன்று யாழ். மத்திய கல்லூரி நிமிர்ந்து நிற்கின்றான். மிஷனரிமாரின் சேவையை அவன் மறக்கவில்லை.

மத்திய கல்லூரி மேலும் பண்புடன், ஒழுக்கத்துடன் அன்புடன் வளர்க என்று மெதடிஸ்த திருச்சபையின் சார்பில் வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்திரு.சி. சா. கருணைராஜ் ,அக்கிராசனர்
வடக்கு—கிழக்கு மெதடிஸ்த மறை மாவட்டம்.

## யாழ்.ஆயரின் செய்தி

யாழ். மத்திய கல்லூரி தனது 181 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடி மகிழும் இத் தருணத்தில், கல்லூரியின் பழைய மாணவர்கள் இந் நிகழ்வை முன்னிட்டு தபால் முத்திரையை வெளியிட்டு சிறப்பாக நினைவு கூருகின்றனர். இவர்களுடைய முயற்சியையும் இவர்கள் பாடசாலையின் அபிவிருத்தியில் கொண்டுள்ள கரிசனையையும் பாராட்டி அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை
யாழ். ஆயர்

## வாழ்க வளமெலாம் பெற்று

கல்லூரித் தாயின் 18 1ஆவது ஆண்டுநிறைவைக் கொண்டாடும் யாழ்ப்பாணம் மத்தி கல்லூரி பழைய மாணவர்களை நான் மனமார வாழ்த்துகின்றேன். மெதடிஸ்த திருச்சபையினர் முதன் முதலின் யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்த இக்கல்லூரி இற்றைவரை பல அறிவறிந்த பெரியோரையும், விளையாட்டுத்துறை வல்லுநர்களையும் தந்துள்ளது.

கிறிஸ்தவமும், சைவமும் ஒன்றிக்க உதவிய அருட்திரு. பேர்சிவல் பாதிரியாரும், ஆறுமுநாவலரும் கைகோர்த்து நின்று பணிபுரிந்த பாரம்பரியத்தை உடைய இக்கல்லூரி எதிர்காலத்தில் வாழ்வும் வளமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. இரத்தினராசா,
கல்விப்பணிப்பாளர்,
வலயம் 1, யாழ்ப்பாணம்.

## பதில் அதிபர் செய்தி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 181ஆவது ஆண்டு விழாவிற்கு ஆசிச் செய்தி அளிப்பதில் நான் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இந்நிறுவனம் 181 வருடங்களாக ஒளிமயமான காலத்தைக் கொண்டிருந்ததுடன் முன்னணியிலும் திகழ்ந்தது.

பாடசாலையின் சுற்றாடல் உடைந்து நொறுங்கியிருக்கும்போது எமது பாடசாலை மேலும் அதே இடத்தில் இருப்பது அதிசயமே. இஃது இந்நிறுவனம் சமூகத்திற்கு அளித்த சேவை அர்ப்பணிப்பேயாகும். எமது பாடசாலையில் உயர்திரு .ஆறுமுகநாவலர், கணிதமேதை எலியேசர் புகழ் பூத்த விளையாட்டு வீரன் உயர்திரு. நா. எதிர்வீரசிங்கம் என்போர் கற்றுள்ளார்கள் இது எமக்கு பெருமையே.

இன்றும் நாம் பரி யோவான் கல்லூரியுடன் பெருந்துடுப்பாட்டத்தை நிகழ்த்துவது நாம் இன்றும் கிறிஸ்தவப் பாரம்பரியத்திலிருந்து முற்றாக விலகவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. எனது 25 வருட காலசேவையில் எத்தனையோ கஷ்டங்களை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அனுபவித்தாலும் அஃது எல்லாவற்றையும் தகர்த்தெறிந்து முன்னேறிச்செல்வது பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

தி. தா. நாகரட்ணம்,
பதில் அதிபர்,
யாழ். மத்திய கல்லூரி.

## மத்திய அன்னையின் மகிமை

போற்றுதற்குரிய கல்விப் பாரம்பரியத்தைக் கொண்ட எமக்கு எம் மண்ணில் காலடி வைத்த பிரித்தானிய மெதடிஸ்த மிஷனரிமார்கள் நவீன கல்விக்கு வழிவகுத்தனர். 01 - 08 - 1816 இல் வண. ஜேம்ஸ் லிஞ்ச் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மத்திய பாடசாலை, வண. பீற்றர் பேர்சிவல் காலத்தில் யாழ்ப்பாண மத்திய பாடசாலையாக 1836 இல் உருப்பெற்று, பின்னர் யாழ். மத்திய கல்லூரியாகவும், இன்று தேசிய பாடசாலையாகவும் மத்திய அன்னை மிளிர்கிறாள்.

வண. புலோ, சிமித், நைல்ஸ். திரு. தம்பர் போன்ற அதிபர்களின் வழிகாட்டலோடு மாணவர் கல்வி சிறப்புற அமைந்தது மன அடக்கம், சகிப்புத்தன்மை, விடாமுயற்சி ஆகிய நற்பண்புகள் மத்தியின் மைந்தரின் பாரம்பரியமாகும். மத்தியின் புகழ் பூத்த மைந்தரில் சேர். வை. துரைசுவாமி. கந்தையா வைத்தியநாதன், சுவாமி விபுலானந்தர் ஆகியோரும் மாணவ ஒலிம்பிக் வீரன் எதிர்வீரசிங்கமும் குறிப்பிடத்தக்கவர்கள்.

அன்னையின் புகழினை உலகறிய தபால் தலை, முதல் நாள் உறை, சிறப்பு மலர் என்பன அவளது பாதங்களில் சமர்ப்பித்து மத்திய அன்னை பல்லாண்டு பல்லாண்டு ஓங்கி வளரப் பிரார்த்திக்கின்றேன்.

இ. இராசாராம்
தலைவர், பழைய மாணவர் சங்கம்.

## ஆள்க நின் கீர்த்தி!

இயேசுபிரானின் கருணையினை அருமையுடன் பரப்பிய அருட்திரு. யோன் வெஸ்லி அடிகளாரே ஒழுங்கமைப்புத் திருச்சபையின் (Methodist) நிறுவுநராவார். இத்திருச்சபையின் மதகுருமார்களான ஜேம்ஸ் லிஞ்ச், தோமஸ் ஸ்குவான்ஸ் ஆகிய இருவரும் இங்கிலாந்திலிருந்து வந்து 01-08-1816 இல் யாழ். நகரின் மத்தியிலே. மத்திய கல்லூரிக்கான ஆரம்ப வித்தை ஊன்றினர்.

தவம் என்னும் பெரிய வித்தாக அது அமைந்தது; அருள் என்னும் பெருவளத்தால் அது அரும்பியது. பவம் என்னும் பங்கம் நீங்கியது. பயன் மரம் பழுத்தாற்போலவும், ஊருணி நீர் நிறைந்தது போலவும் கல்விப் பெருஞ் செல்வப் பேற்றை அள்ளி வழங்கியது. இன்று இரண்டு நூற்றாண்டுகளைக் கடந்து 21ஆம் நூற்றாண்டிற்காகத் தனது மகுடத்தை உயர்த்தி நிற்கிறது.

ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்களாக வாழ்ந்து, கல்லூரித்தாயின் பெருமைக்கு முன்னின்று உழைத்த; உழைக்கின்ற, முன்னாள் மாணவர்களின் பொன்னான பணிகளை இந்நாள் மாணவர்களும் அடியொற்றி இயன்றவரை கல்லூரிக்கு வாழ்வும் வனப்பும் ஊட்டும் வலுவை அவர்களுக்கு இறைவன் அருள வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

நா. க. சண்முகநாதபிள்ளை
முன்னாள் அதிபர், முன்னாள் மாணவன்.

## வளர்ச்சி மேலும் ஓங்குக!

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கல்விப்பணியில் நூற்றி எண்பத்தொரு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. 1816 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி, யாழ்ப்பாணத்தில் அப்போதிருந்த லூதர் தேவாலயத்திலும் அனாதை இல்லத்திலும், ஒழுங்கமைப்புக் குழுவினரால் (Methodist) ஆங்கில பாடசாலையாகவே தற்போதுள்ள யாழ். மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

மத்திய கல்லூரியின் பெருமைக்கும் ஏனைய பல்துறை வளர்ச்சிக்கும் அடிநாதமாகச் செயற்பட்ட அருட்திரு பீற்றர் பேர்சிவல் அவர்களின் நினைவாக அரசு தபாற் தலையை வெளியிட்டது பெருமகிழ்ச்சி தருகிறது. பழைய மாணவர்களின் இந்த நன்முயற்சியை வாழ்த்துவதோடு தொடர்ந்தும் கல்லூரியின் வளர்ச்சி சகல துறைகளிலும் ஓங்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சு. சோதிலிங்கம்.
தலைவர்
சென்ற லைட்ஸ் வி, க.

மலர் அமைப்பு:
பழைய மாணவர் சங்கம்





## மறந்து விடாதீர்கள்!

சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும்
மூக்குக் கண்ணாடிகளைப் பெறுவதற்கும்
இன்றே நாடுங்கள்:

# லாவண்யா

பல் மூக்குக் கண்ணாடி அகம்



நெல்லியடி, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

G.C.E.O/L10வருட கடந்த கால வினா விடைகள் எல்லாப் பாடங்களுக்கும், விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [சி/1233]

நல்ல நிலையில் உள்ள மின்சார குக்கர் (லண்டன்) விற்பனைக்குண்டு.தொடர்பு: வி. ஸ்ரீரங்கநாதன், 10/10, தாளையடி லேன், திருநெல்வேலி தெற்கு. [48681]

**SPOKEN ENGLISH**

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [48700]

**காணவில்லை**

கடந்த 3 வருடங்களாக வளர்த்து வந்த 'டொறின்' என்ற வெள்ளை நிற பொமினேரியன் நாயை 26 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. இதுபற்றிய தகவல் தருபவருக்கு சன்மானம் வழங்கப்படும். கி.ஆ. அருள்ஞானம், புலோலி தெற்கு, புலோலி. [48701]

**இறைச்சிக்கோழி**

இறைச்சிக்கோழி (Broiler) மொத்தமாக விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு கழிவுடன் கொடுக்கப்படும். தொடர்பு: 35/2, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [48680]

**தவறிவிட்டது**

நல்லூருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் மூக்குக்கண்ணாடி, டெலஸ்கோப், ஜொப்காட் விசேட அடையாள அட்டை, பலமுகிய ஆவணங்கள் அடங்கிய கறுப்பு கிட்பாக் 30. 07. 97 காலை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் தயவு செய்து ஒப்படைக்கவும். Dr. விமலகாந்தன், யாழ். போதனாவைத்திய சாலை, யாழ்ப்பாணம். [48703]

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஒகஸ்ட் 1 எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பரீட்சை நிலையத்தில் அமைக்கப்பட்ட மண்டபம் 1, 2 என்பன வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டிருப்பதாக வலயம் 2 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## வாழ்த்துகின்றோம்

**உயர் திரு. ச. விநாயகரத்தினம்**
அவர்கள்
(பன்னாலை, தெல்லிப்பழை)

முப்பத்தொன்பது ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றியும், கீரிமலை சிவநெறிக் கழகச் செயலாளராக தனித்துவமாகச் செயற்பட்டும், எண்ணற்ற மாணவ மொட்டுக்களை மலரச் செய்த நல்லாசிரியர்

**உயர்திரு. ச. விநாயகரத்தினம்**
அவர்கள்

இன்று (01-08-97) அகவை அறுபதை எய்துகின்றார். இந் நன்னாளில் அவரை வாழ்த்தி வணங்கும்:

அன்புள்ளங் கொண்ட நண்பர்கள்

(48688)

## அரசாங்க மரக்கூட்டுத்தாபன அறிவித்தல்

இன்று (01 - 08 - 1997) முதல் எமது நல்லூர் மரக்காலையில் அரிந்த தீராந்திகள் விற்பனை செய்யப்படும். கையிருப்பு குறைவாக இருப்பதால் முதல் வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வடபிராந்திய முகாமையாளர்.
**அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,**
யாழ்ப்பாணம்.

மரக்காலை,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
சட்ட நாதர் வீதி,
நல்லூர்.

(சி–1226)

## மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய திருவிழா

மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி திங்கட்கிழமை (4-8-97) மாலை 5.00 மணிக்கு கொடியேற்றலுடன் ஆரம்பமாகி 7ஆம் திகதி காலை 7.30 மணிக்கு நடைபெறும் திருநாள் திருப்பலியுடன் நிறைவடையும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஓகஸ்ட் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நடைபெறும் திருப்பலி, அன்று இறைவனின் பணிக் குருவாக மருதமடுவில் திருநிலைப்படுத்தப்படவுள்ள ஆலய பங்கு மகன்

அருட் சகோதரர்
**செபஸ்தியாம்பிள்ளை யூட் அமல்தாஸ்**

என்பவரின் நன்றிப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

பங்குத்தந்தை

(48684)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**ச. சி. திருநாவுக்கரசு அவர்கள்**
[ஓய்வுபெற்ற கணக்காளர், கச்சேரி, யாழ்ப்பாணம்]

சங்கத்தானை குமரன் சி. க. வ. கூ. ச. தலைவர் சிகிச்சையின் பொருட்டு கொழும்பு சென்ற

**ச. சி. திருநாவுக்கரசு**

1997 - 07 - 02 இல் கொழும்பில் சிவபதமடைந்தார். அவரது இழப்பினால் ஆறாத்துயரில் இருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் கலந்து கொள்வதுடன், எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சக அங்கத்தவர்கள்,
சங்கத்தானை குமரன்
சி. க. வ. கூ. சங்கம்.

(48695)

## "இறைபணிச் செம்மல்" உயர்திரு. ச. விநாயகரத்தினம்

அவர்களின் அறுபதாவது அகவை நிறைவில்
வாழ்த்துகின்றோம்



★ **வாழ்த்து நாயகரினால் வளம்பெற்ற பாடசாலைகள்**
1. யா/ சுன்னாகம் மயிலணி வித்தியாலயம்
2. பொகவந்தலாவை ஹோலிறோசரி வித்தியாலயம்
3. அட்டன் ஹைலண்டஸ் கல்லூரி
4. யா/ மகாஜனாக் கல்லூரி.

★ **முதன்மை ஆசிரியர் பணி -**
பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டங்கள் (19 வருடம்)

★ **சிறப்பான பாராட்டுக்கள் -**
நல்லாசிரியர் விருது,
"இறைபணிச் செம்மல்" பட்டம்

★ **விளையாட்டுத்துறை -**
பொறுப்பாசிரியர், உதைபந்தாட்டப் பயிற்றுநர்


★ **சமூகப் பணிகள் -**
செயலாளர்- சிவநெறிக்கழகம்,
ஸ்ரீ துர்க்கை தேவஸ்தான உறுப்பினர்.

எம்முடன் 19 ஆண்டுகள் முதன்மை ஆசிரியராகப் (சைவசமயம்) பணியாற்றி, நாற்பது ஆண்டுகள் நல்லாசிரியப்பணியை நிறைவு செய்யும் அன்பரை வாழ்த்துவதில் மகிழ்வு கொள்கின்றோம்.

முதன்மை ஆசிரியர்கள்,
யாழ். வலயம்–01

(48702)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சி. எஸ். திருநாவுக்கரசு**

(சமூகப்பணியே தம்பணியென வாழ்ந்த இளைப்பாறிய கணக்காய்வாளர் [S. L. A. Service] )

மலர்வு: **15 — 10 — 1928**
உதிர்வு: **02 — 07 — 1997**

நாட்டுக்கு நல்விளக்காய்
நமக்கு ஒரு குலவிளக்காய்;
கொழுகொம்பாய் பருமராய்
நேர்மைக்கு நெடு நிலவாய் வாழ்ந்தீரே!
இறை பதம் சேர்ந்தீரே,
நம் கவலைக் கண்ணீர் கன்மேல் எழுத்தாச்சே;
ஓம் சாந்தி! சாந்தி!

தங்களை நினைந்துருகும்:

மனைவி, மக்கள், மருமகன், பேரப்பிள்ளை, பெறாமக்கள், மைத்துனன், மருமக்கள்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(48685)

## IN LOVING MEMORY OF

| ARULPIRAGASAM VICTOR RAJAKULASINGHAM | ROSE GNANAMANY RAJAKULASINGHAM |
|---|---|
| Born: 26 th May 1916 | Born: 23 rd July 1921 |
| Called Torest: 1 st Aug. 1995 | Called To Rest: 14 th Aug. 1974 |

" BLESSED ARE THE DEAD
WHO DIE IN THE LORD "
REV. 14:13

Karuna & Amirtha

NO:- 1 Hensman Lane,
Chavakachcheri.

(48686)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மீளக்குடியமர்தல்

வலிகாமம் வடக்கில் குறிப்பிட்ட சில கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இன்று தமது சொந்த வீடுகளில் மீளக்குடியமர ஏற்பாடாகி உள்ளது.

கடந்த வருடம் ஏப்ரல் மே மாதங்களில் வலிகாமம் பிரதேச மக்கள் மீளக்குடியமர்ந்த ஆரம்ப காலத்திலிருந்தே, தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு அனுமதி கிடைக்காதா என்று ஏங்கியவர்கள் வலி. வடக்கு மக்கள்.

அவர்களில் ஒரு சாராரை (பதினைந்து கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை) மீளக்குடியமர அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டு ஆறு மாதங்கள் கடந்து, இன்றுதான் அவர்களின் ஆவல் நிறைவேறவுள்ளது. இது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும்.

குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள தமது வீடுகளைச் சென்று பார்த்து வந்தும் இன்னும் மீளக்குடியமர அனுமதி தரப்படவில்லை என்று கவலை தெரிவித்து, வாசகர் ஒருவர் உதயனுக்கு எழுதிய கடிதம், சொந்த வீடுகளில் சென்று வாழ்வதற்குச் சம்பந்தப்பட்ட மக்கள் எவ்வளவு அக்கறையாக இருந்தார்கள் என்பதனை வெளிப்படுத்தியது.

இதே ஆதங்கமும், ஏக்கமும் மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ள வலி. வடக்கின் எஞ்சிய பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கும் இருக்கும் என்பதனை எவரும் இலகுவில் உணரலாம்.

வலிகாமத்திலேயே வளமும் செழிப்பும் நிறைந்த சிவந்த மண் பிரதேசம் வலிகாமம் வடக்குப் பகுதியே ஆகும். அதே போன்று கடல்வளம் மிகுந்த பிரதேசமும் வலி. வடக்கே.

ஆகையால் அந்தப் பிரதேசம் முழுவதையும் சேர்ந்த எல்லா மக்களும் மீளக்குடியமர்ந்து தமது தொழில்களை முன்னரைப் போன்று சுதந்திரமாக செய்ய அனுமதிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் செவ்வனே நடப்பதாகப் பெருமைக்குக் கூறிக்கொண்டு ஒரு பிரதேச மக்கள் இன்னமும் அகதிகளாக, இடம்பெயர்ந்தவர்களாக வாழும் சூழ்நிலையைத் தொடர்வது விரும்பத் தக்கதல்ல.

வலி. வடக்கின் ஒரு பகுதியில் மக்கள் சென்று குடியமர அனுமதிக்கப்படாமைக்கு பாதுகாப்புக் காரணங்கள் உண்டு என்று அரசு சொல்கிறது. அந்த நிலை இன்னும் எத்தனை காலத்துக்கு நீடிக்கப் போகிறது?

தமது சொந்தப் பகுதிகளில் மீளக்குடியமர சகல மக்களுக்கும் வகை செய்வதில் அரசு போதிய அக்கறை செலுத்த வேண்டும். அத்தகைய ஒரு சீரான வாழ்க்கை நிலையை ஏற்படுத்த முடியவில்லையெனில் தடங்கல்கள், வசதிக் குறைவுகள் இன்றி சிவில் நிர்வாகம் முழு அளவில் நடைமுறைக்கு வரவில்லை என்றே கொள்ளப்படும்.

மக்கள் நலன் கூடிய செயற்பாடுகளில் அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை என்றால், மக்கள் மேலும் விரக்தி சூழ்ந்த, இருள் நிறைந்த வாழ்க்கையையே நடத்த நேரிடும்.

# பாடசாலை அலுமாரிகளுக்குள் சுமார் 300 கணனிகள் தேக்கம்!

## போதிக்க ஆசிரியர்கள் இல்லை

கொழும்பு, ஓக. 1

தெற்கில் உயர்வகுப்புகள் உள்ள பாடசாலைகளுக்கு அரசால் வழங்கப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான சுமார் 300 கணனிகள் பயன்படுத்தப்படாமல் பாடசாலை அலுமாரிகளில் பூட்டி வைக்கப்பட்டுள்ளன என கொழும்பு பல்கலைக்கழக கணனி மத்திய நிலையம் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்திலேயே இவற்றில் பெரும் பாலானவை வழங்கப்பட்டன.

கணனி வழங்கப்பட்ட போதிலும் கணனி தொடர்பான தொழில் நுட்ப அறிவுடைய போதனாசிரியர்கள் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இப்படியான கணனிகள் பல பயன்படுத்தாது உரிய பராமரிப்பு இன்றி வைக்கப்பட்டதால் செயற்படாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## நல்லூர் தெற்குவாசல் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஓக. 1

பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வசந்தமண்டபத்துக்கு நேரே அமைந்துள்ள தெற்குவாசல் எதிர்வரும் 7 ஆம் திகதி மாலை 4 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் திறக்கப்படும்.

ஆலய வருடாந்த மஹோற்சவம் மறுநாள் காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (இ-3)

## மேலும் 8 டாக்டர்கள் யாழ். வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஓக. 1

வடபகுதியில் கடமை புரிய என நியமனம் வழங்கப்பட்ட டாக்டர்களில் மேலும் எட்டுப் பேர் நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து விமான மூலம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நான்கு பெண் டாக்டர்களும், நான்கு ஆண் டாக்டர்களும் இதில் அடங்குவர்.

வடபகுதியில் கடமை புரிய என நியமனம் வழங்கப்பட்ட டாக்டர்கள் 34 பேரில் இதுவரை 13 பேர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

இந்த எட்டு டாக்டர்களில் மூவர் யாழ். போதனா வைத்தியசாலையிலும், ஏனையோர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவு வைத்தியசாலைகளிலும் கடமை புரியவுள்ளனர். (இ-15)

## வருடாந்த ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 85 ஆவது வருடாந்த ஒன்று கூடலும் பொதுக் கூட்டமும் நாளை சனிக்கிழமை கல்லூரியின் பீற்றோ மண்டபத்தில் நடைபெறும். (ஐ-4)

## செஞ்சிலுவைக்கப்பலில் கொழும்புக்கு சிகிச்சைக்குச் சென்றோர் வெற்றிலையுடன் திரும்பினர்

### ஆஸ்பத்திரியில் வியாபாரிகள் கூட்டம்

குடாநாட்டில் வெற்றிலைக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாடு யாழ். ஆஸ்பத்திரிவரை எதிரொலித்துள்ளது.

கொழும்பில் மேலதிகச் சிகிச்சைக்காகச் சென்ற ஒரு தொகுதி நோயாளர்கள் நேற்று முன்தினம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் யாழ். வந்தடைந்தனர்.

இவர்களில் சிலர் கொழும்பில் இருந்து தம்முடன் பெருமளவு வெற்றிலையையும் எடுத்து வந்தனர்.

கப்பலில் வந்துசேர்ந்த இவர்களை ஏற்றிவந்த வாகனம் யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தவுடன் நோயாளிகள் வெற்றிலை எடுத்து வந்திருப்பதான தகவல் யாழ். நகரில் பரவியது.

அவ்வளவுதான் நகரில் இருந்து வெற்றிலை வியாபாரிகள் யாழ். ஆஸ்பத்திரிக்குப் படையெடுத்தனர். நோயாளிகளிடம் விலைபேசி வெற்றிலையை வாங்கிவிட அவர்கள் முண்டியடித்தனர். இதனால் ஆஸ்பத்திரி வளாகத்தில் சிறிது நேரம் ஆரவாரம் ஏற்பட்டது.

வெற்றிலையை வாங்கிவிட முண்டியடித்த வியாபாரிகளை அப்புறப்படுத்த ஆஸ்பத்திரி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பெரும்பாடு படவேண்டியதாயிற்று. (ஐ-15)

## நோயற்ற சந்ததிகளே தேசத்தின் சொத்துக்கள்

### சுகாதார கருத்தரங்கில் உரை

நெடுந்தீவு, ஓக. 1

நோயற்ற, திடகாத்திரமும் ஆரோக்கியமும் மிக்க சந்ததிகளே ஒரு தேசத்தின் மிகப் பெரிய சொத்துக்கள் ஆகும்.

நெடுந்தீவு மாவட்ட வைத்திய சாலையில் கடந்த வாரம் சுகாதார வார நிகழ்வுகளைத் தொடக்கி வைத்து உரையாற்றிய வைத்திய அதிகாரி வை. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

குறைவற்ற செல்வம் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட நோயற்ற வாழ்வுக்கு சுகாதார நெறிமுறைகளை அனைத்துமக்களும் அறிந்திருத்தல் அவசியம். பிளேக், டெங்கு, கொலறா போன்றவற்றை விட [illegible] போன்ற புதிய நோய்கள் பல இன்று மனிதகுலத்திற்குச் சவாலாக உள்ளன. இது போன்ற விபரீதமான நோய்களில் இருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ள முழு மூச்சுடன் செயற்பட வேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. சுகாதார வாரத்தின் மூலம் மக்களிடையே நோய்ப் பரம்பல், தடுப்பு முறைகளை எடுத்துக்காட்டி உலகளாவிய ரீதியில் உரிய பலாபலன்களை பெற வழிவகைகளை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்— என்றார்.

நோய்த்தடுப்பு முறை சுகாதார பழக்க வழக்கங்கள் குறித்த கருத்துப் பரிமாறல்களும் சிரமதானப் பணிகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

வைத்தியசாலை ஊழியர்களும், பொதுமக்களும், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளும் [illegible] சிரமதானப் பணிகளிலும் கலந்து கொண்டனர். (ஐ-111)

## மாசிவன் மயானத்தில் சிரமதானம்

நீர்வேலி வடக்கு மாசிவன் மயானத்தில் கடந்த திங்களன்று வலி. கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் செ. குகதாசன் தலைமையில் சிரமதானம் நடைபெற்றது. யாழ். பிராந்திய பதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ப. பரஞ்சோதி, வலி. கிழக்கு பிரதேச சபை, ஊழியர்கள், வலி. கிழக்கு பிரதேச சபை நீர்வேலி உப அலுவலக ஊழியர்கள், நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் ஆகியோர் இச் சிரமதானப் பணியில் பங்குபற்றினர்.

சிரமதானப் பணியாளர்களுக்கு நீர்வேலி வடக்கு இராஜன் சன சமூக நிலையத்தினர் சிற்றுண்டியும், குளிர்பானமும் வழங்கினர்.

## மண்எண்ணெய் வழங்க புதிய திட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 1

குடாநாட்டில் பங்கீட்டு அடிப்படையில் மண்எண்ணெய் வழங்க புதிய திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவிருக்கிறது.

யாழ். செயலகத்தில் பிரதேச செயலர் மற்றும் திணைக்கள தலைவர்களுக்கு நடந்த கூட்டத்தில் இத்திட்டம் பற்றி முடிவு செய்யப்பட்டது.

யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

★ பாவனையாளர்களுக்கு வாராந்தம் 2 லீற்றர் ப.நோ.கூ. சங்க கிளைகள் ஊடாக வழங்கப்படும்.

★ விவசாய சங்கங்களின் சிபார்சுடன் விவசாயத் திணைக்கள அதிகாரியின் அனுமதியுடன் விவசாயிகளுக்கு தேவைக்கு ஏற்ப எரிபொருள் முகவர் நிலையங்கள் மூலம் வழங்கப்படும்.

★ அவசர தேவைகளுக்கு பிரதேச செயலரின் சிபார்சுடன் வழங்கப்படும். (இ-3)

## மத்தியகல்லூரி 181 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். மத்திய கல்லூரியின் 181 ஆவது நிறுவுநர் நாள் விழா இன்று காலை 9-00 மணிக்கு கல்லூரி தம்பர் மண்டபத்தில் சிறப்பாக கொண்டாடப்படவிருக்கின்றது

நிறுவுநர் நாளையொட்டி தபால் தலை, முதல் நாள் உறை, கல்லூரியின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை வெளியிட்ட 180 ஆவது ஆண்டு மலர் ஆகியன இன்று வெளியிட்டுவைக்கப்படும்.

இவ்வைபவத்துக்கு பேராசிரியர் வ. நவரட்ணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கௌரவ விருந்தினராகவும், வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் சு. இரத்தினராசா சிறப்பு விருந்தினராகவும் பங்குபற்றுவர்.

"இன்று மாறி வரும் சமூக பொருளாதார நிலைக்கேற்ப கல்வி" என்னும் தலைப்பில் 180 ஆவது நிறைவு விழா நினைவுப் பேருரையை பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை நிகழ்த்துவார். (இ-3)

## நாளை

**ஆடி 17**

சனிக்கிழமை

திதி: சதுர்த்தசி பிற்பகல் 1.11 வரை.

நட்சத்திரம்: புனர்பூசம் நண்பகல் 12.02 வரை.

போதாயன அமாவாசை

சுபநேரம்: 3.03-4.33

ராகுகாலம்: 9.03-10.33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## இலங்கை வங்கி 58 ஆம் வருட பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கை வங்கியின் 58 ஆவது வருடப் பூர்த்தியையொட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதி பிரதான கிளையில் வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று பிறக்கும் குழந்தைகளுக்கும், இன்று முதல் மாத முடிவுக்கு இடைப்பட்ட காலத்தில் மணம் முடிக்கும் மணமக்களுக்கும் வங்கியின் முதலீட்டில் கணக்கு திறக்கும் விசேட திட்டம் ஒன்று 58 ஆவது வருடப் பூர்த்தியையொட்டி இலங்கை வங்கியால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (இ-3)

## இடம்பெயர்ந்த மாணவரின் அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், ஓக. 1

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு கல்வித் திணைக்களத்தில் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்த இடம்பெயர்ந்த மாணவர்கள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பித்து இதுவரை அனுமதி அட்டை கிடைக்காதவர்கள் விண்ணப்பம் அனுப்பிய பதிவுத் தபால் பற்றுச்சீட்டையும் பணம் கட்டிய தற்கான பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியையும்வேறு ஏதாவது நிரூபிக்கக் கூடிய ஆவணங்களையும் சமர்பித்தால் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டை பெற்றுத்தர ஒழுங்கு செய்யப்படும் என்று யாழ். வலயம் —1 இன் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

புதிய பழைய பாடத்திட்டங்கள் மாறிக் கிடைக்கப்பெற்ற பரீட்சார்த்திகள் தாங்கள் விண்ணப்பித்த பாடத்தைக் குறித்து உறுதியுரை வழங்கி பரீட்சை எடுப்பதற்கு அனுமதி அட்டை பெற்றுத் தரப்படும் என்றும் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றில் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் இன்று வெள்ளிக்கிழமை வலயம்—1 கல்வித் திணைக்களத்திற்கு சமூகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCIES

# DCS

DATA CONNECTION SYSTEMS
(PVT.) LIMITED

We invite applications from suitable persons to the following posts:

1. Post of Instructors in Computer Technology (2)
2. Post of Instructors (Trainees) (2)

**Qualifications:**

a. He/ She should have a B Sc. Degree from a recognized University, with computer Science as a subject.
b. Degree from a recognized University and a post Graduate Diploma in Computer Technology from a recognized institution.
c. Applicants with experience in the relevant field will be given preference.

Applications with CV, Copy of Certyficates and name of two non-related referees with their addresses should be sent by registered post to the following addres within 15 days of this Advertisement.

**Director D.C.S.,**
7, Ratnam Lane, off K.K.S. Road,
Vannarpannai, Jaffna.

(48718)


# 14 ஆயிரம் வறிய மாணவரின் கல்வி மேம்பாட்டுக்காக புதிய திட்டம்

## 'யுனிசெவ்' உதவியுடன இம்மாதம முதல அமுலுக்கு

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். மாவட்டத்தில்போரினால் பாதிக்கப்பட்டு வறுமைக் கோட்டுக்கு கீழ் வருமானம் பெறும் 14 ஆயிரம் மாணவர்களின் கல்வியை மேம்படுத்த ''யுனிசெவ்'' அமைப்பின் உதவியுடன் திட்டம் ஒன்று இம்மாதம் முதல் நடைமுறைப்படுத்தப் பட விருக்கிறது.

அடுத்த வருடம் ஜூலை மாதம் வரை மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டத்துக்கு ''யுனிசெவ்'' அமைப்பு 36 லட்சம் ரூபா நிதியை உதவ முன்வந்துள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தேவையான மொத்த செலவீனமான 53 லட்சம் ரூபாவில் 17 லட்சம் ரூபாவை வடக்கு—கிழக்கு மாகாண கல்வியமைச்சு வழங்க முன் வந்துள்ளது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த குழு ஒன்றை வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுச் செயலாளர் சுந்தரம் டிவகலால நியமித்துள்ளார்.

மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி, யாழ். வலயப் பணிப்பாளர்களான எஸ். இரத்தினராசா, எஸ். சிவராசா, மாகாணசபை பிரதம கணக்காளர் என். கிருஷ்ணானந்தன், மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலக கணக்காளர் ஆர். சுகுணதீரன், யாழ். கல்வித் திணைக்கள கணக்காளர் எஸ். சுதந்திரபாலன் ஆகியோர் இக்குழுவில் அங்கம் பெறுகின்றனர்.

மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். வரதசீலன் இந்தப்பணிகளை கண்காணிக்க நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-150-3)

## கப்பலின்றி...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்ட போதிலும் அது பயணிகளை ஏற்றிச் செல்ல தகுதி அற்றது என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்த விவகாரத்தில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

பயணிகளின் பாவனைக்கு உகந்ததாக 'குட்வில் கைட்' கப்பல் தற்பொழுது திருத்தப்பட்டு வருகிறது.

திருமலை துறைமுக அதிகாரிகள் இன்று இக்கப்பலைப் பார்வையிட்டு அதன் தகுதி குறித்துத் தீர்மானிப்பார்கள்.

இக்கப்பல் சேவையில் ஈடுபட தகுதியுள்ளதா என்பது இன்று தெரியவரும் என்று திருமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் வேலும் மயிலும் தெரிவித்தார்.

கப்பல் சேவையில் ஈடுபட தகுதியானது என சிபார்சு செய்யும் பட்சத்தில் கப்பல் சேவையை உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார். (இ-3-150)

## ஆயுதத்துடன்..

(முதலாம் பக்கத் தொடர்)

காப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

குச்சவெளியில் உள்ள ஒரு பொலீஸ் கான்ஸ்டபிளிடம் இருந்து இந்த ஆயுதங்களைப் பெற்றதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-3-150)

## மேலும் இருவர்...

(முதலாம் பக்கத் தொடர்)

வரும் நேற்று முன் தினம் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஏற்கனவே மூன்று பாடசாலை அதிபர்கள் உட்பட நால்வர் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டது தெரிந்ததே. (இ-15)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

காப்பு இணைப்பதிகாரி நிகால் ஜெயக்கொடி, பிரதிப் பொலீஸ் மா அதிபர் எக்கநாயக்க உட்படப் பலர் அழைக்கப்பட்டனர்.

''தற்போதுள்ள சந்தை 43 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அச் சமயம் 6 ஆயிரம் பேர் வாழ்ந்த திருமலையில் தற்போது ஒருலட்சம் பேர் வாழ்கின்றனர். மக்களின் தேவை கருதி புதிய சந்தை அமைக்கப்பட்டு வருகிறது. இனவாதம் கொண்ட நோக்கில் புதிய சந்தை அமைக்கப்படவில்லை'' என்று நகர சபைத் தலைவர் சூரியமூர்த்தி தெரிவித்தார்.

இதற்கு பதில் அளித்த மேலதிக செயலாளர் திருமலை நகர அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டே புதிய கட்டட அமைப்பு மேற்கொள்ளப்படுகிறது என்பதை உணர்கிறேன். இனவாதம் எழாத வகையில் மெதுவாக பணிகள் மேற்கொள்ளப்பட... கேட்டுக்கொண்டார். (இ-3-150)

## காலமானார்

இலங்கையின் மூத்த எழுத்தாளர்களுள் ஒருவரும் படைப்பு இலக்கிய அறிவாளியுமான ஜே. பெனடிக்ற் பாலன் காலமானார். அவருக்கு வயது 58.

பெனடிக்ற் பாலன் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக தமிழ் இலக்கியத்துறைகளில் பணி புரிந்தவர்.

நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். முற்போக்குத் தமிழ் எழுத்தாளர்கள் வரிசையில் முன்னணியில் திகழ்ந்தவர். சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற எழுத்தாளர். இவருடைய சிறுகதைகள் இலங்கையில் உள்ள தமிழ் வாசகர்களை மாத்திரமின்றி தமிழக எழுத்தாளர்களையும் பெரிதும் கவர்ந்தன.

மகிதுகம பிரதேசத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்த இவர் மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் இலக்கிய வித்தகராக விளங்கினார்.

இவர் குட்டி, சொந்தக்காறன், விபசாரம் செய்யாதிருப்பாயாக, தலை விதியை பறிகொடுத்தோர் போன்ற ஆக்கங்களை தமிழ் இலக்கிய உலகுக்கு விட்டுச் சென்றுள்ளார் (இ-4)

## மருத்துவ பரிசோதனை

நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் ஒழுங்கு செய்துள்ள காசிப்பிள்ளை வித்தியாலய மாணவர்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் இன்று வெள்ளிகாலை 9.30 மணிக்கு மேற்படி பாடசாலையில் இடம்பெறும். அத்துடன் இலவசமாக மருந்தும் வழங்கப்படும் என நல்லூர் லயன்ஸ் கழக தலைவர் தெரிவித்துள்ளார். (இ)

## தகுதியுடைய

(முதலாம் பக்கத் தொடர்)

சேர்ந்த கணவர் அல்லது மனைவி தனது தாய் நாட்டில் வாழும் மனைவியை அல்லது கணவனை பிரான்ஸுக்கு அழைப்பதற்கு இதுவரை இருந்து வந்த தடைகளை நீக்குவது எனவும் பிரெஞ்சு அரசு திர்மானித்துள்ளது.

இதற்கிடையில், வெளிநாட்டைச் சேர்ந்த பெற்றோருக்குப் பிறந்த ஒரு பிள்ளை தனது 18 வயதையடைந்த பின்னரே அதற்கு பிரான்ஸ் நாட்டுப்பிரஜா உரிமை வழங்கப்படும் என முன்னைய ''கொன்சர் வேட்டிவ்'' அரசின் தீர்மானத்தை நீக்குவதற்கு தற்போதைய தொழிற்கட்சி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-10)


மயிலணி சுன்னாகம்

## வளர்பிறை விளையாட்டுக் கழகம்

நடத்தும்

சிறுவர் பாடசாலை நிதிக்கான

## உதைபந்தாட்ட இறுதி ஆட்டம்

காலம்: 02 - 08 - 1997 சனிக்கிழமை
இடம்: ஸ்கந்தா விளையாட்டு மைதானம், கந்தரோடை.
நேரம்: 2.30 மணி [புதிய நேரம்]

3 ஆவது இடத்துக்கான ஆட்டம்
அளவெட்டி யுத் விளையாட்டுக் கழகம்
எதிர்
ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம்

முதலாம் இரண்டாம் இடத்துக்கான ஆட்டம்
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம்
எதிர்
மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகம்

உதைபந்தாட்டப் போட்டியில் 20 வருட பூர்த்தியை முன்னிட்டு ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக உதைபந்தாட்ட வீரர் திரு. வை. தருமகுலநாதன் (வெள்ளை) அவர்களை பாராட்டும் நிகழ்வு நடைபெறும்.

அன்பளிப்பு ரூபா 10-

வளர்பிறை வி. க.

(48716)



## இலங்கை வங்கி

BANK OF CEYLON

## 58 வருட சேவை நிறைவுவிழா

இடம்:- யாழ். மேற்றரக்கிளை மண்டபம்.
காலம்:- 01 - 08 - 1997 காலை 9.00 மணி.

மேற்படி நிறைவு விழாவிற்கு வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகைதந்து, சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

எமது வங்கியின் 58 வருட சேவை நிறைவை முன்னிட்டு 01 - 08 - 97 அன்று பிறக்கும் குழந்தைகளுக்கும், 01 - 08 - 97 முதல் 31 - 08 - 97 வரை திருமணமாகும் புதுமணத் தம்பதிகளுக்கும் வங்கி முதலீட்டில் கணக்கு திறக்கப்படும் என்பதையும் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

பிரதான முகாமையாளரும்,
ஊழியர்களும்.
இலங்கை வங்கி,
யாழ். மேற்றரக் கிளை.

[சி/1240]



## துரித சேவை

### விரையுங்கள்!

★ அடையாள அட்டை மற்றும் ஆவணங்கள் கவரிடுதல். (லமனேற்றிங்)

★ தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகள்.

★ றோணியோ பிறின்ரிங் வேலைகள்.

இவை அனைத்தும் ஒரே இடத்தில்

## அருண்

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/1243)



## CHUNDIKULI GIRLS' COLLEGE, Jaffna.

## OLD GIRLS' ASSOCIATION

Members are hereby informed that the Special General Meeting scheduled to be held on 6-8-97 has been postponed due to unavoidable circumstances.

It will now be held on 14-8-97 at 3.00 p.m (S.L.T.) at the college premises.

All members are kindly requested to be present.

— Secretary

(சி/1244)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org